தொடக்கப் பள்ளி

தேர்வு

கட்டுரை (தாள் 1)

## PAPER – 1 ( COMPOSITION )

பெயர் : ______________________ (      )

வகுப்பு : ____________

தேதி : ____________

நேரம் :

மொத்த நேரம் - 40 MIN

மதிப்பெண் : ____________

பெற்றோர் கையொப்பம் : ____________

மாணவர்களுக்கானக் குறிப்புகள் : ஆசிரியர் கூறும்போது தேர்வுத்தாளைத் திறக்கவும்
தேர்வுத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்

சரிபார்த்தல் மற்றும் திருத்தம் செய்து முடித்தல்

ஆசிரியர் கையொப்பம் : ____________

தேதி : ____________

**P3 ROSE**

தொடக்கப்பள்ளி

## தமிழ் மொழி அரையாண்டுத் தேர்வு

## தொடக்கநிலை 3 கட்டுரை - 2013

மதிப்பெண்கள் ______________ பெற்றோர் கையொப்பம் : ________________

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 60-70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. படத்தின் அடியில் உதவிச்சொற்கள் கொடுக்கப் பட்டுள்ளன. நீ அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



புத்தம் புது பூங்கா

பொது விடுமுறை

பெற்றோரும் பிள்ளைகளும்

'பச்சை பசேல்' என்று

குளத்தில் அன்னங்கள்

அழகான அன்னங்கள்

ஓடிப் பிடித்து விளையாடி

மலர்களின் கண்காட்சி

புகைப்படங்கள்

விரைவு உணவு

## 01. வேற்றுமை ( 5 மதிப்பெண்கள் )

| |
|---|
| பின்வரும் கேள்விகளைக் கவனமாகப் படித்துச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் பதிலை அடைப்பினுள் எழுது. |

1. கபிலன் தன் ______________ அறைக்குள் நுழைந்தான்.

   1) அண்ணனால் 3) அண்ணனை
   2) அண்ணனுடைய 4) அண்ண[illegible] ( )

2. அப்போது கபிலனின் அண்ணன் ______________ இல்லை.

   1) அறையின் 3) அறைக்கு
   2) அறையிடம் 4) அறையில் ( )

3. ______________மேல் அண்ணனின் புதிய பேனா இருந்தது.

   1) மேசையின் 3) மேசையில்
   2) மேசைக்கு 4) மேசையுடைய ( )

4. கபிலன் அண்ணனின் புதிய ______________ எடுத்துக்கொள்ள ஆசைப்பட்டான்.

   1) பேனாவை 3) பேனாவால்
   2) பேனாவோடு 4) பேனாவுடன் ( )

5. ஆனால், ______________ கேட்காமல் அவருடைய புதிய பேனாவை எடுக்கக் கபிலன் பயந்தான்.

   1) அண்ணனுடைய 3) அண்ணனோடு
   2) அண்ணனிடம் 4) அண்ணனுக்கு ( )

## அடைமொழி (மதிப்பெண் 5)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

6. தாத்தாவும் பாட்டியும் எங்களிடம் ____________ பேசுவார்கள்.

1. குறைவான 2. அன்பாக
3. நீளமாக 4. நிறைவான ( )

7. கோமாளியின் ______________ செயலைக் கண்டு சிறுவர்கள் சிரித்தனர்.

1. கடுமையான 2. தேவையான
3. சிறப்பான 4. வேடிக்கையான ( )

8. பாதையில் கிடந்த __________ பாறையை பலர் ஒன்று சேர்ந்து நகர்த்தினர்.

1. உருண்டையான 2. சிறிய
3. பெரிய 4. வட்டமான ( )

9. என் அத்தை சமைத்த ________ உணவை நான் சாப்பிட்டேன்.

1. சுவையான 2. உயர்வான
3. குறைவான 4. பிரியமான ( )

10. என் அண்ணன் என்னை விட ___________ இருப்பார்.

1. நெட்டையாக 2. மெல்லியதாக
3. அகலமாக 4. குறுகலாக ( )

## 03. செய்யுள் ( 5 மதிப்பெண்கள் )

கீழ்க்காணும் செய்யுளை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்துக் கோட்டில் எழுது.


11. ஒப்புரவு ______________________

12. ______________________ இகழ்ச்சி

13. ஔவியம் ______________________

14. ______________________ ஈரவேல்

15. ஐயம் ______________________ உண்



## ஒலி வேறுபாடுகள்

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (4 மதிப்பெண்கள்)

16. பள்ளத்தில் விழுந்த சிறுவன் __________ பொறுக்க முடியாமல் அழுதான். ( )

17. அம்மா மீன் கறி சமைக்க கடையில் __________ வாங்கினார். ( )

18. எங்கள் தோட்டத்தில் உள்ள வண்ண மலர்களின் __________ என்னைக் கவர்ந்தது. ( )

19. மாணவர்கள் ஒரு __________ கயிற்றை பாம்பு என்று எண்ணி கத்தினார்கள். ( )

20. சரவணன் நேற்று __________ செல்லவில்லை. ( )

| | |
|---|---|
| 1) வலி | 2) வழி |
| 3) புலி | 4) புளி |
| 5) அலகு | 6) அழகு |
| 7) நீளமான | 8) நீலமான |
| 9) பள்ளிக்கு | 10) பல்லிக்கு |

## தெரிவுவிடைக் கருத்தறிதல் (5)

**கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படித்து அதனடியில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு ஏற்ற மிகச் சரியான பதிலைத் தேர்ந்தெடு. பின் அதன் எண்ணை எழுது.**

ஓர் ஊரில் ரவி என்ற வியாபாரி இருந்தான். அவன் கடல் கடந்து சென்று வியாபாரம் செய்து வந்தான். ஒரு நாள் அவன் படகில் சென்று கொண்டிருந்தபோது பெரும் புயல் வீசியது. கடலில் அலைகள் உயரமாக எழுந்தன. ரவியின் படகு அலைகளில் சிக்கி உடைந்தது. ரவி நீந்துவதில் கெட்டிக்காரன். அதனால், அவன் ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு நீந்திக் கரையை அடைந்தான். அங்கே ஒரு மலை இருந்தது. ரவி அந்த மலையில் ஏறினான். அந்த மலை உச்சியில் இருந்த மலைவாசி மக்கள் அவனைப் பிடித்தனர்.

அவர்கள் அவனை ஒரு மரத்தில் கட்டிப்போட்டு, மரத்தைச் சுற்றிலும் தீயை மூட்டினர். அப்போது மலைவாசிகளின் தலைவன் அங்கு வந்தான். அவன் ரவியிடம் சில கேள்விகளைக் கேட்டான். ரவி அக்கேள்விகளுக்கு மலைவாசியின் மொழியிலேயே பதில் கூறினான். எனவே, அவர்கள் அவனை விடுதலை செய்தனர். மலைவாசிகள் அவனுக்குப் படகு ஒன்றையும் செய்து அனுப்பி வைத்தனர்.

### வினாக்கள்

21. ரவியின் தொழில் என்ன ?

(1) அவன் ஒரு மீனவன்.
(2) அவன் ஒரு படகோட்டி.
(3) அவன் ஒரு வணிகன்.
(4) அவன் ஒரு நீச்சல் வீரன்.

( )

1

22. ரவி படகில் எங்கே சென்றுகொண்டிருந்தான் ?

(1) ஊரைச் சுற்றிப் பார்க்க
(2) வியாபாரம் செய்ய
(3) மீன் பிடிக்க
(4) நடுகடலில் நீந்த ( )

23. கடலில் அலைகள் ஏன் உயரமாக எழுந்தன ?

(1) காற்று பலமாக வீசியதால்
(2) மழை பெய்ததால்
(3) மின்னல் மின்னியதால்
(4) மலைவாசிகள் கோபம் அடைந்ததால் ( )

24. மலைவாசிகள் ஏன் ரவியைப் பிடித்துச் சென்றனர் ?

(1) அவன் ஒரு திருடன் என்பதால்
(2) அவன் மலையை ஏறியதால்
(3) அவன் தன் படகை இழந்ததால்
(4) அவன் புதியவன் என்பதால் ( )

25. இறுதியில் என்ன நடந்தது ?

(1) மலைவாசிகள் ரவியை அடித்துப் போட்டனர்.
(2) ரவி தப்பித்துக்கொண்டான்.
(3) ரவியின் படகு காணாமல் போனது.
(4) ரவி நீந்தியே ஊருக்குச் சென்றான். ( )

4

## முன்னுணர்வுக் கருத்தறிதல் (5)

**கீழ்க்காணும் பகுதியில் ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, எழுது.**

குமரன் தினமும் பூங்காவில் மெதுவோட்டம் ஓடுவான். அன்று மாலை அவன் பூங்காவில் தன் நண்பனை 26. ____________. இருவரும் மெதுவோட்டம் ஓடிவிட்டு, சற்று 27. ____________ ஓய்வு எடுத்தனர். திடீரென்று யாரோ அலறும் 28. ____________ கேட்டது. இருவரும் 29. ____________ சுற்றும் முற்றும் பார்த்தனர். பூங்காவின் நடுவில் ஒரு முதியவர் 30. ____________ கிடந்தார். இருவரும் காவலருடன் தொடர்பு கொண்டு நடந்ததைக் கூறினார்கள். முதியவரின் குடும்பத்தினர் இருவருக்கும் நன்றி கூறினார்கள்.

**சத்தம்** **ஆச்சரியத்துடன்**

**மயங்கி** **கூப்பிட்டான்**

**நேரம்** **சந்தித்தான்**

**அதிர்ச்சியுடன்**

5

மூவிடப்பெயர் (5)

**கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியான சொல்லை எழுது.**

31. முயல்குட்டி அங்கும் இங்கும் துள்ளிக் குதித்தது.

முயல்கள் அங்கும் இங்கும் துள்ளிக் ____________

32. நாளை பெண்கள் வாசலில் கோலம் போடுவார்கள்.

நாளை என் அம்மா வாசலில் கோலம் ____________

33. தற்போது நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்?

தற்போது ____________ எங்கே வசிக்கிறாய்?

34. நான் நேற்று செடியில் இருந்த மலரைப் பறித்தேன்.

____________ செடியில் இருந்த மலரைப் பறித்தோம்

35. தேவன் நன்றாகக் காற்பந்து விளையாடுகிறான்.

நான் நன்றாகப் பூப்பந்து ____________.

5

<u>கருத்து விளக்கப்படம் (5)</u>

முல்லை நடனப் பள்ளி நடத்தும்

நடனப்போட்டி 20..

போட்டி நாள்: 24 நவம்பர்

நேரம்: மாலை எழு மணி

<u>சிறுவர்கள் பிரிவு</u>

பத்து முதல் பன்னிரண்டு வயது
உள்ள சிறுவர்கள் பங்கேற்கலாம்

கட்டணம்: பதினைந்து வெள்ளி ($15)

<u>இளையர்கள் பிரிவு</u>

பதிமூன்று முதல் பதினாறு வயது
உள்ள இளையர்கள் பங்கேற்கலாம்

கட்டணம்: இருபது வெள்ளி ($20)

நடனப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் முல்லை நடனப் பள்ளியில் பெயரைப் பதிவு செய்யவேண்டும்.
இறுதி நாள் - 14 நவம்பர்

<u>சரியான விடையை எழுது</u>

36. நடனப்போட்டியை ____________________ பள்ளி நடத்துகிறது.

37. போட்டி ____________________ மாதம் நடைபெறுகிறது.

38. பத்து முதல் பன்னிரண்டு வயது உள்ளவர்கள் ____________________ பிரிவி ல் பங்கேற்கலாம்.

39. இளையர் பிரிவில் பங்கேற்க ____________________ வெள்ளி கட்டணம் செலுத்தவேண்டும்.

40 ஆர்வம் உள்ளவர்கள் முல்லை நடனப்பள்ளியில் ____________________ பதிவு செய்யவேண்டும்.

| | |
|---|---|
| இருபது | பதினைந்து |
| சிறுவர்கள் | பெயரை |
| முல்லை நடன | நவம்பர் |

சுயவிடைக் கருத்தறிதல் ( 10 மதிப்பெண்கள் )

கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி.

மாறனின் குடும்பத்தினர் விலங்கியல் தோட்டத்திற்குச் சென்றனர். அவர்கள் காலை எட்டு மணிக்கு விலங்கியல் தோட்டத்தை அடைந்தனர். முதலில் அவர்கள் 'ஆமேங்' எனும் மனிதக் குரங்குடன் காலை உணவு உண்டார்கள். அதன் பிறகு அவர்கள் மிருகங்களின் வித்தைக் காட்சிகளைப் பார்க்கச் சென்றார்கள்.

முதலில் இரண்டு குரங்குகள் வந்தன. அவை உயரத்தில் தொங்கிய கம்பிகளில் ஏறிப் பல வித்தைகளைச் செய்தன. பின்னர் இரண்டு நீர் நாய்கள் வந்து மிக நன்றாக மிதிவண்டி ஓட்டின.

அடுத்து, ஒரு யானை சிறிய நாற்காலியின் மீது ஏறி நின்று வணக்கம் தெரிவித்தது. இன்னும் வேறு பல விலங்குகள் பல வித்தைகளைச் செய்தன. கோமாளி ஒருவன் சில வாத்துகளுடன் வந்து வேடிக்கை செய்தான். மக்கள் அனைவரும் இதைக் கண்டு சிரித்து மகிழ்ந்தனர். நிகழ்ச்சி முடிந்ததும் மாறனும் அவன் குடும்பத்தினரும் வேறு மிருகங்களைப் பார்க்கச் சென்றனர். மாறனின் அப்பா ஒரு பெரிய மலைப் பாம்பைக் கழுத்தில் போட்டுப் புகைப்படம் எடுத்தார். மலைப் பாம்பைக் கண்ட மாறன் அச்சம் அடைந்தான். அவன் அந்த மலைப் பாம்புடன் படம் எடுத்துக்கொள்ளவில்லை.

கேள்விகள்

41. மாறனும் அவன் குடும்பத்தினரும் யாருடன் காலை உணவு உண்டார்கள்?

42. நீர் நாய்கள் என்ன வித்தை செய்து காட்டின ?

43. மக்கள் எப்போது சிரித்து மகிழ்ந்தனர் ?

44. யானை எதன் மேல் ஏறியது?

45. மாறன் ஏன் மலைப் பாம்புடன் படம் எடுத்துக்கொள்ளவில்லை ?

## சொற்பொருள் ( 5 மதிப்பெண்கள் )

கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களுக்குச் சரியான பொருள் தரும் விடையைத் தேர்ந்தெடுத்துக் கோட்டில் எழுது.

46. உண்டார்கள் = ____________________


47. விலங்குகள் = ____________________

48. அனைவரும் = ____________________


49. அப்பா = ____________________

50. அச்சம் = ____________________

| | |
|---|---|
| எல்லாரும் | தாயார் |
| பயம் | மிருகங்கள் |
| சாப்பிட்டார்கள் | தந்தை |



முற்றும்



**விடைகள் ( Primary 3 - SA 2 2013 )**

1. (2) 2. (4) 3. (1) 4. (1) 5. (2)

6. (2) 7. (4) 8. (3) 9. (1) 10. (1)

11. ஒழுகு 12. ஏற்பது 13. பேசேல் 14. இயல்வது 15. இட்டு

16. (1) 17. (4) 18. (6) 19. (7) 20. (9)

21. (3) 22. (2) 23. (1) 24. (4) 25. (2)

26. சந்தித்தான் 27. நேரம் 28. சத்தம் 29. அதிர்ச்சியுடன் 30. மயங்கி

31. குதித்தன 32. போடுவார் 33. நீ 34. நாங்கள் 35. விளையாடுகிறேன்

36. முல்லை நடன 37. நவம்பர் 38. சிறுவர்கள் 39. இருபது 40. பேயரை

41. மாறனும் அவன் குடும்பத்தினரும் 'ஆமெங்' எனும் மனிதக் குரங்குடன் காலை உணவு உண்டார்கள்.

42. நீர் நாய்கள் மிதிவண்டி ஓட்டின.

43. கோமாளி ஒருவன் சில வாத்துகளுடன் வந்து வேடிக்கை செய்த போது மக்கள் சிரித்து மகிழ்ந்தனர்.

44. யானை சிறிய நாற்காலியின் மேல் ஏறியது.

45. மலைப் பாம்பைக் கண்டு மாறன் அச்சம் அடைந்ததால் மாறன் மலைப்பாம்புடன் படம் எடுத்தக் கொள்ளவில்லை.

46. சாப்பிட்டார்கள்

47. மிருகங்கள்

48. எல்லாரும்

49. தந்தை

50. பயம்